பக்கங்கள் 4    விலை: ரூபா 2-00

University of ... Library
RECEIVED
1989-10-23
Periodicals Division

# விடுதலை

இதழ்: 16    திங்கட்கிழமை    23-10-1989

## விமான விபத்தில் 120 பேர் பலி!

(கொண்டுராஸ்)

கொண்டுராஸ் நாட்டைச் சேர்ந்த போயிங் விமானம் ஒன்று அந்நாட்டின் தலைநகரிலுள்ள விமான நிலையத்துக்கு அருகே வெடித்துச் சிதறியதில் 120 பேர் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது

இவ்விபத்தில் கொண்டுராஸின் தொழிலாளர் நல அமைச்சரும் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, நிக்கரக்குவா, கோஸ்டாரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த உயரதிகாரிகளும் உயிரிழந்துள்ளனர் 16 பேர் காயங்களுடன் உயிர் தப்பிவிட்டதாக அதிகாரிகள் அறிவித்தனர்.

★ அரச அதிபருக்கு பதிலாக மாவட்ட ஆணையாளர்

★ மாகாண அரசின் தலைமைச் செயலர் அறிவிப்பு

# மாவட்ட நிர்வாகத்தில் மாற்றம்!

(திருமலை நிருபர்)

**வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட ரீதியான நிர்வாகம் மாற்றப்படுகிறது என வடக்கு கிழக்கு மாகாண அரசின் தகவல்துறையிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இம்மாதம் முதல் நாட்டிலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், கிராமசேவையாளர் பிரிவுகள் மாகாணசபைகளின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏற்படுள்ள மாற்றங்கள் குறித்து மாகாண தலைமைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர்களும், கிராம சேவகர்களும் இம்மாதம் முதல் மாகாண அரசின்கீழ் செயற்பட்டு வருகின்றனர் உள்ளூராட்சி அமைச்சு மாகாண சபைகளுக்கு வழங்கியுள்ள அதிகாரங்களை மாவட்ட மட்டத்தில் செயற் டுத்தும் நோக்குடன், மாவட்ட ஆணையாளர்களை நியமிப்பதென வடக்கு கிழக்கு மாகாண அரசு முடிவு செய்திருக்கிறது. உடனடியாக இதனைச் செயற்படுத்தும் விதத்தில், வடக்கு கிழக்கில் தற்போது அரசாங்க அதிபர்களாகப் பணிபுரிபவர்களை அந்தந்த மாவட்ட ஆணையாளர்களாக நியமித்துள்ளதாக மாகாண அரசின் தலைமைச் செயலாளர் திரு. வே. ந,சிவராசா தெரிவித்துள்ளார்.

புதிய மாற்றத்தின் கீழ் உதவி அரசாங்கஅதிபர் பதவி 'கோட்டச்செயலாளர்' பதவி என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் செயற்படுத்த 'கோட்டப் புனர் நிர்மாண கண்காணிப்புக் குழு' நியமிக்கப்படும். இக்கண்காணிப்புக்குழு

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று இந்தியாவில் வேட்புமனு தாக்கல்

(சென்னை)

இன்று இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் சகல மாநிலங்களிலும் ஆரம்பமாகும் இதைத் தொடர்ந்து தேர்தல் பணிகளுக்கான சகல நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்படும் எனத்தெரிகிறது.

பாதுகாப்பு சம்பந்தமான அறிவுறுத்தல்கள் அனைத்தும் மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு மாநில அரசிடமிருந்து கிடைத்துள்ளது.

ஆந்திரா, கோவா, சிக்கிம் கர்நாடகா, உத்தரப்பிரதேச மாநிலங்களில் இப்பாராளு

(4ம் பக்கம் பார்க்க)

## ரஞ்சன் வடக்கு விஜயம்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடல் பிரதேசத்தில் தீவிர கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு காரைநகர் கடற்படை அதிகாரிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதங்கள் மற்றும் சட்ட விரோதமான பொருட்கள் இலங்கைக்குள் கொண்டுவரப்படுவதைத் தடுக்கவே தீவிர கண்காணிப்பு முடுக்கிவிடப்படவேண்டும் என்று அமைச்சர் கூறினர்.

தலைமன்னர், காரைநகர், காங்கேசன்துறை ஆகிய இடங்களிலுள்ள கடற்படைத் தளங்களுக்குநேற்றுமுன் தினம் விஜயத்தை மேற்கொண்ட பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் அமைதிப்படை விலகலின் பின்னுல் பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் ஆராய்வதற்காக வடபகுதிக் கடற்படைத் தளங்களையும் இராணுவ அதிகாரிகளையும் சந்தித்துச் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, வடக்கிலுள்ள இலங்கைக் கடற்படைக் கப்பல்களுக்கு உதவியாக தற்போது ''அல்ஃபா 525'' என்னும் படைக் கப்பலும் காங்கேசன்துறையில் நிறுத்தப்பட்டுள்ளது.

## இலங்கை மன்றக் கல்லூரி இராணுவத்தின் வசம்

(கொழும்பு)

இலங்கை மன்றக் கல்லூரியினுல் நடாத்தப்பட்டு வந்த சகல பயிற்சிநெறிகளும் தற்பொழுது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்திற்கு அருகில் அமைந்துள்ள பிரமாண்டமான அமைப்பையுடைய இலங்கை மன்றக் கல்லூரி தற்பொழுது விசேட அதிரடிப் படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் அரசாங்கத்திஞல் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்த நிலையத்தில் தற்பொழுது இலங்கை வானெலியிலும், ரூபவாஹினியிலும் விசேட சேவையிலீடுபடுத்தப்பட்டுவரும் ஊழியர்கள் தங்க இடமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியில் பணிபுரிந்துவந்த ஊழியர்கள் விசேட விடுமுறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## இராசாவின் தோட்ட மக்கள் நீதி, நிவாரணம் கோரி மா.ச. உறுப்பினருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராசாவின் தோட்ட 14-ம் வட்டார மக்கள் தமக்கு நீதி, நிவாரணம் வழங்கி உதவுமாறு மாகாண சபை உறுப்பினரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

தங்களுடைய வீடுகள் மண் குடிசைகள் எனவும், வறிய நிலையில் உள்ள நாம் காலம் காலமாக மழை காலங்களில் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இந்த மகஜரில் இவர்கள் தெரிவித்துள்ளனர்

1987 அக்டோபர் கலவரத்தின்போது காங்கேசன்துறை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் அகதிகளாக இடம் பெயர்ந்திருந்த தமக்கு, தமது பகுதி கிராமசேவையாளரின் கவனயீனத்திஞல் உரிய நிவாரணம் கிடைக்காமல்போய் விட்டதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு உரிய நிவாரணமும், நீதியும் கிடைக்க மாகாண சபை உறுப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இவர்கள் கேட்டுள்ளனர்

## "எமது பிரச்னைகளுக்கு சர்வகட்சி மாநாடு எதுவும் தீர்வுதரப் போவதில்லை"

### ஈ. என். டி. எல். எவ்.

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் உட்பட அனைத்து பிரச்சினைகள் பற்றிப் பேசுவவதற்கு நாம் தயாராக இருப்பதுடன் சர்வகட்சி மாநாடு போன்ற எதுவும் எமது பிரச்சினைக்கு தீர்வு தரமாட்டாது'' இவ்வாறு ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''அனைத்துக்கட்சிகள் மகாநாட்டிற்கான ஸ்ரீலங்கா அரசின் அழைப்பை நிராகரிப்பது ஏன்?'' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஜனதிபதி பிரேமதாசாவின் அனைத்துக்கட்சிகள் மாநாட்டிற்கான அழைப்பை ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி நிராகரிக்கின்றது.

வடக்கு கிழக்கு உட்பட அனைத்து மாநிலங்களிலும் ஜனநாயக வழிமுறைகள் சிதைக்கப்பட்டுவிட்டன. எனவே ஜனநாயகத்தையும் அமைதியையும் ஏற்படுத்த மனப்பூர்வமாக இந்தமாநாட்டைக் கூட்டியுள்ளாரா என்றுல் அதுதான் கிடையாது.

தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்கு மட்டுமே பிரேமதாஸா இந்த நாடகத்தை நடிக்கின்றுர். பிரேமதாஸாவின் வலையில் வசமாக சிக்கிய புலிகளைப் பயன்படுத்தி கடந்த 40 ஆண்டு காலமாக தமிழ் மக்

(4ம் பக்கம் பார்க்க)

## முடிவுறுத வேலைதிட்டங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை

[திருமலை]

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் கடந்தவருடம் நிதி ஒதுக்கப்பட்டு மாவட்ட சபைகளால் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையாத வேலைத்திட்டங்களைப் பூர்த்திசெய்யும் நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாண அரசு மேற்கொண்டு வருகிறது.

மாவட்ட சபை முறை இப்போது ஒழிக்கப்பட்டுவிட்டதனுல் பிரதேச சபைகளுக்கு ஊடாக எஞ்சிய நிதிகளை வழங்கி முடிவுறுத வேலைகளை பூர்த்திசெய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுளளது.

இதன்பிரகாரம் முதற்கட்டமாக முல்லைத்தீவு, வவுனியா, மன்ஞர் ஆகிய மாவட்டங்களில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களிடம் தலா 50 ஆயிரம் ரூபா கையளிக்கப்பட்டுள்ளது என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு கே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியருக்கு மேலதிக 500 ரூபா வழங்கப்படுமா?

(கொழும்பு)

அரசாங்கம் நிதி ஒதுக்காததினால் வடக்கு, கிழக்கு பகுதி அரச ஊழியர்க்கு மேலதிகமாக வழங்க மத்திய அரசு தீர்மானித்த 500 ரூப இன்னமும் வழங்கப்படவில்லை

பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் வடக்கு, கிழக்குப்பகுதியில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தைவிட மேலதிகமாக 500 ரூபா வழங்குவதென்று மத்திய அரசு தீர்மானித்தது இது தொடர்பான சுற்றறிக்கையையும் பொது நிர்வாக அமைச்சு அனுப்பிவைத்தது.

ஆனால் இதற்குரிய நிதி வடக்கு, கிழக்குப்பிரதேசத்தில் உள்ள திணைக்களங்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை,

இந்த நிதியை வழங்குகின்ற பொறுப்பு மத்திய பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் ஆனால் அவர் இது குறித்து இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரியவருகிறது.

இந்த மேலதிகமான 500 ரூபா சென்ற யூலை மாதத்திலிருந்து வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகைக்கு முன்பாக இப் பணம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

## தபால் நிலையங்களுக்கு தளபாடங்கள் வந்தன

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்திற்கு பல புதிய தபால் பெட்டிகள், தராசுகள், இரும்பு அலுமாரிகள் மற்றும் தளபாடங்கள் கொழும்பிலிருந்து வந்துள்ளன

இவை இங்குள்ள சிலதபால் நிலயங்களுக்கு வழங்கப்படும் எனவும், தபால் பெட்டிகள் சில வீதிகளிலும் பழுதான பெட்டிகள் உள்ள இடங்களிலும் பொருத்தப்படும் என தபால் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மைக்கால வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பல தபால் அலுவலகங்களுக்கு இவை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அங்கொடை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு தங்கியிருந்த மூன்று யுவதிகள் கர்ப்பம்!

(கொழும்பு)

அங்கொட மனநோயாளர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட மூன்று இளம் பெண்கள் கருத்தரித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் இருபது வயதுள்ள இந்த யுவதிகளின் உறவினர்கள் இச்சம்பவம் குறித்து பெரிதும் ஆச்சரியமும் கவலை கொண்டுள்ளனர்.

இவர்களின் மனோநிலையைப் பாவித்து ஆஸ்பத்திரியில் பணிபுரியும் சிலர் இப்பெண்களுடன் தகாத முறையில் நடந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண்களின் இந்த நிலையைக் கண்டு ஏனைய பெண்களை ஆஸ்பத்திரியில் இருந்து விடுவித்துச் செல்லவும் சில பெற்றோர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## ஹோம்பினன்ஸ் கம்பனி பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்குமா?

(யாழ்ப்பாணம்)

ஹோம் பினன்ஸ் நிதி நிறுவனத்தில் பணத்தை முதலீடு செய்தவர்கள் சிலருக்கு, பாதிக்கப்பட்டவர்களால் அமைக்கப்பட்ட சங்கம், தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளது.

ஹோம் பினன்ஸ் கம்பனியில் முதலீடு செய்த பல தமிழ்மக்களுக்கு அக் கம்பனி முறிந்துபோனதால் நஷ்டஈடோ ஏனைய நிவாரண உதவிகளோ வழங்கப்படவில்லை

மத்தியவங்கி இவர்களுக்கு ஏதோ நஷ்டஈடு தருவதாக விளம்பரம் செய்தது. ஆனல் பாதிக்கப்பட்டவர்களுக்குஇன்னமும் ஒன்றுமே கிடைக்கவில்லை.

இதேவேளை தென்பகுதியில் இவ்வாறு சில நிதி நிறுவனங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய வங்கி குறிப்பிட்ட அளவு நிவாரண உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இம் மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர்கள்வந்துசேரவில்லை

(யாழ்ப்பாணம்)

இம்மாதத்துக்குரிய ஒய்வூதியங்களுக்கான பென்சன் வவுச்சர்கள் இதுவரையும் வந்து சேரவில்லை என ஒய்வூதியம் பெறுவோர் கவலை தெரிவித்தனர்.

வழமையாகமாத நடுப்பகுதியில் இவை வருவதாகவும் தீபாவளி நெருங்கிவிட்டதால் இதன் தாமதம் தமக்குபெரும் கஷ்டம் ஏற்படுத்தியுள்ளதாகவும் ஒய்வூதியம் பெறுவோர் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் அரச அலுவலகங்கள் வழமையாகநடைபெறும்போது இந்த வவுச்சர்கள் இங்குவரத்தாமதம் ஏன் என்று இவர்கள் கேட்கின்றனர்.

## பட்டப்பின்படிப்புக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில்

(கொழும்பு)

கனடா, ஐக்கிய இராச்சியம், ஹொங்கொங், திறனிடாட் தொபாகோ, நைஜீரியா ஆகிய நாடுகளில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஐக்கிய இராச்சியம், கனடா ஹொங்கொங், நைஜீரியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிற்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் திறனிடாட் – தொபாகோவில் கமத்தொழில் பொருளியல் பொறியியல் துறைகளில் பட்டப்பின் படிப்பைத் தொடர்வதற்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் பதினோராம் திகதிக்கு முன்னர் உயர்கல்வி, விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சின் வெளிநாட்டு முகவர்கள்கிளைக்கு அனுப்பப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய லஞ்ச ஆணையாளர் தகவல் அரச ஊழியரில் 98 சதவீதம் லஞ்சம் வாங்குகின்றனர்!

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களில் தொண்ணூற்றெட்டு சதவீதமானோர் லஞ்சம் வாங்குகின்றனர் என்று புதிய லஞ்ச ஆணையாளர் திருமதி நெலும் கமகே தெரிவித்துள்ளார்.

இதனல் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சொன்ன அவர் இதனை ஒழிப்பதற்குச் சகலரதும் ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

இந்த அரசாங்க ஊழியர்கள் லஞ்சம் வாங்குவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், கடித மூலமும் புகார்கள் வந்துள்ளதாகவும் சிலர் பயம் காரணமாக தகவல்களைத் தருவதில்லை என்றும் குறிப்பிட்டார்

கடந்த மாதம் சுமார் இருநூறு முறைப்பாடுகள் இவர்களுக்கு எதிராக வந்துள்ளதாக கூறிய அவர் பத்தாயிரம் ரூபாவிற்கு ஒன்று, பதினையாயிரம் ரூபாவிற்கு இரண்டு, நாலாயிரம் ரூபாவுக்கு ஒன்று, ஐயாயிரம் ரூபாவுக்கு ஒன்று, ஆறுயிரம் ரூபாவுக்கு ஒன்று, ஆயிரம் ரூபாவுக்கு ஆறு என்ற கணக்கில் லஞ்ச முறைப்பாடுகள் (வழக்குகள்) உள்ளன என்று சுட்டிக்காட்டினர்

1970 இலிருந்து பல லஞ்ச வழக்குகள் தீர்க்கப்படாமல் உள்ளதாகவும் இவற்றிற்காக பிரத்தியேக நீதிமன்றங்களை எதிர்காலத்தில் அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்

## கடத்தப்பட்டார்!

(பளை)

இளிநொச்சியிலிருந்து வாகனம ஒன்றில் பயணஞ்செய்த காளி என்பவர் இடைவழியில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான இவர், பின்னர் கடத்தியவர்களிடமிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ முதுகலைமாணி பட்டமேல் பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவத்தின் கலை முதுமானி (எம் ஏ.) பட்டமேல்ப் படிப்பு பயிற்சி நெறி இவ்வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த பத்து வருட காலமாக யாழ். பல்கலைக்கழகத்தில் கலைமாணி (பி ஏ.) பட்டத்திற்கு மட்டுமே கிறிஸ்தவ நாகரீகத்துறை கற்பிக்கப்பட்டு வந்தது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் கலைமாணி (பி. ஏ.) அல்லது இறையியல் (B. Th) பட்டம் பெற்றவர்கள் எம். ஏ. பட்ட மேற்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

இதேவேளை யாழ் பல்கலைக் கழகத்தில் பி ஏ பட்டத்திற்கான கிறிஸ்தவ நாகரீகத் துறையின் பாடத்திட்டம் இவ்வாண்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவத்தின் வரலாறு, வேதாகம ஆய்வு, மெய்யியல்– இறையியல் சிந்தனை, வளர்ச்சி கிறிஸ்தவ கலை இலக்கியம் ஆகிய நான்கு பெரும் பிரிவுகளாக பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## வீட்டுக்குள் மண்டையோடுகள்

(கொழும்பு)

மாகோ பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து பல மண்டையோடுகள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மண்டையோடுகள் எப்படி இங்கு வந்தன? எதற்காகக் கொண்டுவரப்பட்டன? என்பது குறித்து விசாரணைகள் தொடர்கின்றன.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புகார் காணமல்போனவர்களை கண்டுபிடித்துத் தாருங்கள்

(கொழும்பு)

தற்போது கொழும்பு வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகளிடம் தென்பகுதியில் காணமல் போனவர்களை கண்டுபிடித்துத்தருமாறு சில அமைப்புகளும் பிரமுகர்களும் கேட்டுள்ளனர்.

இதேநேரம் தெற்கில்பாதிக்கப்பட்டவர்களுக்கு சில உதவிகளை இச்சங்க மூலம் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

1971இல் 'சேகுவரா' நடவடிக்கையின் போதும், 1983க்கு பின் வடக்கு கிழக்கு சம்பவங்களின் போதும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் இங்குவர அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையாரும், ஜனதிபதி ஜே. ஆரும் தடைவிதித்தமையும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச்சங்கம் இவர்கள் இங்கு வருவதற்கு விரும்பவில்லை என கொழும்பிலிருந்து வரும் ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது

## விடுமுறை இல்லை

(யாழ்ப்பாணம்)

தீபாவளியை முன்னிட்டு நேற்றும் நேற்று முன்தினமும் யாழ் நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன.

## அவுஸ்திரேலிய புலமைப் பரிசில் 2000 விண்ணப்பதாரிகளில் 28 பேருக்கே கிடைக்கும்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் 1990 ஆண்டில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப்பரில்சிகள் 28 இலங்கை மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளன.

இந்த உயர்கல்வி புலமைப் பரிசிலைக் கோரி இதுவரை சுமார் இரண்டாயிரம் விண்ணப்பங்கள் கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்திற்குக் கிடைத்துள்ளன.

தெரிவாகும் 28 விண்ணப்பதாரிகளினதும் விபரங்கள் நவம்பர் அல்லது டிசம்பர் மாதங்களில் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தினல் அறிவிக்கப்படவுள்ளது.

இவ்வருடம் டிசம்பர் மாதம் 13ம் திகதி வரை எதுவித அறிவித்தலும் கிடைக்கப்பெறுதவிண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பம் தெரிவாகவில்லை யென்பதை ஊகித்துக் கொள்ள முடியுமெனவும் தூதுவராலயம் அறிவித்துள்ளது!

## ஜே. வி. பி. யின் அச்சுறுத்தலால் வீடுகளில் இருந்து வெளியேற ஐந்து ஏ.எஸ்.பி.க்கள் மறுப்பு

(கொழும்பு)

தாம் தற்போது குடியிருக்கும் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டால் தமக்கும் தமது குடும்பங்களுக்கும் உயிராபத்து ஏற்படும் என்று ஐந்து உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் (ஏ. எஸ். பி.) தெரிவித்துள்ளனர்.

சட்டத்தரணி லால் பெரேரா மூலம் கொழும்பு மேலதிக நீதவான் ஈ. டீ. குலதிலகாவிடம இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இந்த பொலிஸ் அதிகாரிகள் வீடுகளைத் தேடி அலைவது மிகவும் ஆபத்தானது எனவும் சட்டத்தரணி நீதவானிடம் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப ஐந்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் தத்தம் பொலிஸ் பகுதியின் வீடுகளில் இருந்து வெளியேறும் வகையில் கொழும்பு பகுதி பிரதி பொலிஸ் மா அதிபர் (டீ ஐ. ஜி ) நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்களவைத் தேர்தல்**

# தமிழகத்தில் 4கோடி 25ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிப்பர்

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 1984-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது இருந்ததைவிட சுமார் ஒரு கோடியால் அதிகரித்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மக்களவைத் தேர்தலில் தமிழ் நாட்டிலிருந்து நான்கு கோடிக்கு மதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்

1984-ம் ஆண்டு தேர்தலின்போது இந்த எண்ணிக்கை மூன்று கோடி எண்பது லட்சமாக இருந்தது.

இவ்வாண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலின் போது இந்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் மூன்று கோடி ஐம்பத்தி நான்கு லட்சமாகும். தமிழ் நாட்டில் இப்போதைய மொத்த வாக்காளர்களான சுமார் நான்கு கோடி இருபத்தையாயிரம் பேரில் முப்பத்திநான்கு இலட்சத்து எழுபத்திநான்கு ஆயிரத்திற்கும் சிறிது கூடுதலான எண்ணிக்கையில் இளைஞர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இருபத்தியொரு வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை மூன்று கோடி அறுபத்தைந்து இலட்சமாகும்.

## ரஜனி, கே. ஆர். விஜயா, ஜீ. வி.
# தமிழக நடிகர் மூவருக்கு இந்திரா காந்தி விருதுகள்

(சென்னை)

தமிழக நடிகர்கள் மூவர் உட்படஇருபத்தைந்துபேருக்கு இந்திரா காந்தி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன

ரஜனிகாந்த், கே. ஆர். விஜயா, ஜீ. வி. ஆகிய மூவருமே இந்திரா காந்தி விருதைப் பெற்றுள்ள தமிழக நடிகர்களாவர்.

சமூகசேவை செய்பவர்கள் மற்றும் பல் வேறு துறைகளில் சிறப்பாகப் பணிபுரிபவர்களில் தலைசிறந்தவர்களை அகில இந்திய ஒற்றுமை மாநாடு தேர்வு செய்து வருடாவருடம் இந்திரா காந்தி தேசிய ஒற்றுமை விருதுகளை வழங்கி வருகின்றது.

இந்த ஆண்டிற்குரிய விருது வழங்கும் வைபவம் சென்னை தாஜ்கோரமண்டல ஹோட்டலில் நடைபெற்றது மத்திய அமைச்சர் திரு. சோலங்கி விருதுகளை வழங்கினர்.

## கொழும்பு பெரியாஸ்பத்திரியில்
# வார்ட்டில் தங்கியிருந்த பெண் மீது பலாத்காரம்!

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரி வார்ட்டில் இருதயநோய்க்கு சிகிச்சை பெற்றுவந்த பதினைந்து வயது தீபனி என்ற யுவதியை நள்ளிரவு நேரம் இனந்தெரியாத சிலர் பலாத்காரம் புரிந்ததாக புகார் செய்யப்பட்டுள்ளது.

நோயாளியான இந்த யுவதிக்கு சத்திர சிகிச்சை நடைபெறவிருந்தது. 25ம் வார்டில் பாதையில் தான் நள்ளிரவு ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது சிலர் தன்மீது பலாத்காரம் புரிந்ததாகவும் அப்பெண்ணின் பெற்றோர் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

## மேஜர் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்

(சென்னை)

தமிழக முன்னேற்ற முன்னணியின் முன்னாள் பொதுச் செயலாளர் மேஜர் சுந்தரராஜன் நேற்றுமுன்தினம் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. ஜி. கே. மூப்பனார் முன்னிலையிலே திரு. சுந்தரராஜன் இக்கட்சியில் சேர்ந்துள்ளார்.

### அ. அ. தி. மு. க. வில் வலம்புரிஜான்

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு வலம்புரி ஜான் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. அ. தி. மு. க. வில் நேற்றுமுன்தினம் சேர்ந்துள்ளார்.

## தென்பகுதியில்
# தொடரும் வன்செயலுடன் மேகநோயும் அதிகரிப்பு!

(கொழும்பு)

தென்பகுதியில் அதிகரிக்கும் வன்செயல்களுடன் போட்டி போட்டுக்கொண்டு பாலியல் வியாதிகளும் பெருகி வருவது ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் அங்கு 146 பேருக்கு மேகநோய் ஏற்பட்டிருப்பது அறியப்பட்டது.

இதேபோன்றே தென்பகுதியின் வேறு மாவட்டங்களிலும் பலருக்கு மேகநோய்த் தொற்று ஏற்பட்டிருப்பது அறியப்பட்டுள்ளது

நகர்ப்புறக் கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்களில் அநேகமானோர் பாலியல் வியாதிகளுக்கு அதிகளவில் உள்ளாகியிருப்பதுவும் இந்த ஆய்வின் மூலம் அறியப்பட்டிருக்கின்றது.

பாலியல் வியாதிகளுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## தினசரி ரயில் சேவையால்
# கொழும்பு பஸ்சேவைகளும் கட்டணங்களும் குறைந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

கொழும்புக் கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கு மிடையேயான யாழ் தேவி ரயில் சேவையிலீடுபடும்பயணிகளின் தொகை குறைந்துள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை முன்னர் சராசரி ஐந்து பஸ்களை கொழும்பு-யாழ் ஒரு மார்க்க சேவையிலீடுபடுத்திவந்தது. தற்போது இவற்றின் தொகையும் குறைக்கப்பட்டுள்ளன

இதேபோன்றே முன்னர் கொழும்பு சேவையிலீடுபட்டு வந்த பல மினிபஸ்களும் தமது சேவையை தற்பொழுது குறைந்துளளன.

தினசரி ரயில் சேவையால் பஸ் பயணிகளின் தொகை வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து கொழும்பு யாழ் மார்க்கத்திற்கான தனியார் பஸ் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன

## புத்த விகாரையில்
# ஆயுதம் மீட்பு

(கொழும்பு)

மொரட்டுவை பகுதியில் உள்ள புத்த விகாரையொன்றிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் இராணுவ சீருடைகள், பொலிஸ் அதிபருக்குரிய பாட்ஜுகள், காக்கி புஷ் கோர்ட்டுகள் என்பனவும் இருந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

## தொழில் நுட்பக் கல்லூரிகளில்
# வன்முறைகள் காரணமாக பரீட்சைகளும் இல்லை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில்இடம்பெறும் வன்முறைகளையடுத்து கடந்த செப்டம்பர் மாதம் ஆரம்பமாகவிருந்து அக்டோபர் 2ம் திகதிவரை பின்போடப்பட்ட தொழில் நுட்ப கல்லூரிகளின் நிகழும் கல்வியாண்டின் மூன்றுந்தவணைக்கான வகுப்புகள் காலவரையின்றி பின்போடப்பட்டுள்ளன.

இதேபோல 1988ல் நடைபெற்ற தொழில்நுட்பக் கல்லூரிக்கான இறுதிப்பரீட்சை முடிவுகளும் இதுவரை வெளியிடப்படவில்லை

1987ல் வடக்கில் நடைபெற்ற வன்முறைகளால் அப்போது இப்பரீட்சை யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறுமல் போய்விட்டதால் 1987ம் கல்வியாண்டு மாணவர்களும் விசேட பரீட்சைகள் எதுவுமின்றி 1988 இலேயே பரீட்சை எழுத வேண்டியநிலை ஏற்பட்டது.

## சீனி விலையேற்றத்தால்
# பனங்கட்டியின் மவுசு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சீனி, விலையேற்றத்தையடுத்து பனங்கட்டி, சர்க்கரை என்பவற்றின் மவுசு மீண்டும் அதிகரிக்கத் தொடங்யுள்ளது

தற்பொழுது ஒரு கிலோ சீனி 32 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் தேனீருக்கு சீனிபோடும் பழக்கத்தை பலா மறந்துவிட முயன்று வருகின்றனர்கள். தற்பொழுது பலரும் பனங்கட்டி

(4ம் பக்கம் பார்க்க)

## ஆறு வருடங்களின் பின்பு
# தமிழ்ப் பாடசாலை ஆரம்பம்

(கொழும்பு)

புளத்சிங்கள தொகுதியில் ஹொரண என்ற இடத்தில் உள்ள தமிழ் மகாவித்தியாலயம் கடந்த ஆறு வருடங்களின் பின்பு திறந்துவைக்கப்பட்டது.

'செடா' திட்டத்தின் கீழ் இந்தப்பாடசாலையில் ஆசிரியர்கள் விடுதி, புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

1983 இனக்கலவரத்தையடுத்து இப்பாடசாலை சேதமானதுடன் இயங்காமலும் இருந்தது

**சுப்பர் சொல்கிறர்**

வேத ஆகமத்தின் (பைபிள்) பழைய ஏற்பாட்டின்படி உலகின் முதல் மனிதர் ஆதாம்-ஏவாள்

இவர்களின் மைந்தர்களில் 'காயின்' என்பவன் நிலத்தில் பயிரிடும்தொழில் புரிந்தான். 'ஆபேல்' என்பவன் ஆடுகளை மேய்த்தான்

'காயின்' தான் பயிரிட்ட கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வந்தான்.

'ஆபேல்' ஆடுகளில் நல்லவைகளை கர்த்தருக்கு காணிக்கையாக்கினன்.

'கர்த்தர்' காயியினின் காணிக்கைகளை ஏற்கவில்லை. 'ஆபேலை'யும் அவன் காணிக்கைகளையும் அங்கீகரித்தார்.

இதனால் 'காயின்' தனது சகோதரன் ஆபேல் மீது எரிச்சல்,பொறுமை அடைந்தான். அவன் முகம் மாறியது.

## அதுதான் நடந்துவிட்டது

அப்போது 'கர்த்தர்' அவனை நோக்கி, உன்முகநாடிஏன் வேறுபட்டுள்ளது.

நீ நன்மை செய்தால் மேன்மை அடைவாய் இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும் ஆபேல் மேல் ஏன் பொறுமை கொண்டுள்ளாய் நல்லபடி நடந்து நீ அவனை வெற்றி கொள்ள முயலு என்றர்.

'காயின்' ஆபேலுடன் கோபம் கொள்ளாதவன் போல நடித்துப் பேசிக் கொண்டான்.

ஒருமுறை இருவரும் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில் 'காயின்' தன் சகோதரன் 'ஆபேலுடன் விரோமாய் பேசி அவனைக் கொலைசெய்தான்.

'கர்த்தர்' காயினை நோக்கி உன் சகோதரர் எங்கே? என்றர்.

அதற்கு 'காயின்' நான் அறியேன். அவனுக்கு நான் காவலாளியோ? என்றன்.

அதற்கு, கர்த்தர் என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூபபிடுகிறது

இப்பொழுது உனது சகோதரனுடைய இரத்தத்தை உன் கையினலே வாங்கிக் கொள்ளத் தன் வாயைத்திறந்துள்ள இந்தப் பூமியிலே நீ சபிக்கப் பட்டிருப்பாய்

நீ நிலத்தைப் பயிரிடும் போது அது தன் பலனை இனி உனக்கு கொடாது.

நீ பூமியில் நிலையற்று அலைகிறவனுய் இருப்பாய் என்றர்.

அப்போது 'காயின், கர்த்தரை' நோக்கி எனக்கு இட்ட தண்டனையை என்னல் சகிக்க முடியாது.

இன்று என்னை இந்த தேசத்திலிருந்து துரத்தி விடுகிறீர் நான் உமது சமுதாயத்துக்கு விலகி மறைந்து பூமியில் நிலையற்று அலைகிறவனுய் இருப்பேன். என்னைக் கண்டு பிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றர்.

நன்மை செய்யாதவன் பாவத்தை அனுபவிப்பான். தன் சகோதரனை காரணம் ஏதும் இன்றி தனக்கு 'மேன்மை' கிடைக்கவில்லையே என்பதற்காக கொல்பவன் தண்டனை பெறுவான் என்பதனை வேதாகமத்தின் மேற்படி கதை தெளிவுபடுத்துகிறது.

ஆனல் வரலாற்றின் வாழ்வு நிலையிலும் இது. உண்மை பொய், புரட்டு, கொலை என்பனவற்றை செய்து வருபவர் பெற்ற தற்காலிக வெற்றி மின்னல் போல் தோன்றி மறைந்துவிடும். 'குட்டு' வெளிப்பட்டபின் சமுதாயமே அவர்களைக் காட்டுக்கு கலைத்துவிடும்.

அதுதான் நடந்துவிட்டது.

# 'ஸ்ரீ' இலக்கத்தகடு முறை அடுத்த வருடம் முதல் மாறும்

(கொழும்பு)

வாகனங்களில தற்போதுள்ள 3 ஸ்ரீ, 11 ஸ்ரீ போன்ற ஸ்ரீ இலக்கத் தகடு முறையை அடுத்த வருடம் முதல் மாற்றியமைக்கவும் புதிய முறையில் வாகனங்களைப் பதிவு செய்யவும் போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த மாற்றங்களை செய்யும் விபரங்கள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக வெளிநாடுகளில் உள்ள போக்குவரத்து பதிவு செய்யும் முறைகளைப் பற்றி அறிந்[illegible]தாகவும் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் திருமதிஎச். எம். எஸ்.தொடகதெனியா தெரிவித்தார்.

இதேவேளை நாட்டிலுள்ள தூதரங்களின் (ராஜதந்திரி) கார்களுக்கும் தற்போதுள்ள 98 ஸ்ரீ இலக்கத்தை மாற்றி அந்த நாட்டின் பெயரைக் கொண்டதாக மாற்றவும் தீர்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை

# ஒற்றுமையே பலம்!

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை வடக்கு கிழக்கு மகாண அரசு பொறுப்பேற்கவேண்டும் என்னும் தீர்மானம் சென்ற வாரம் வடக்குக் கிழக்கு மாகாணசபையின் கூடட்த்தொடரில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் பிரேரிக்க, எதிர்க்கட்சித் தலைவர் ஜனுப் ஷேகு இஸத்தீன் அவர்கள் அனுமதிக்க மாகாண அரசில் அங்கம் வகிக்கும் ஆளும் கடசிகளும், எதிர்க்கட்சிகளும் மட்டுமல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரதும் ஏகோபித்த சம்மதத்துடன் இத்தீர்மானம் நிறைவேறியுள்ளது.

வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை மட்டுமன்றி, முழு இலங்கையைப் பொறுத்த வரையிலும் கூட இத்திமானம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்

முஸ்லீம் மக்களையும், தமிழ் மக்களையும் மோதவிடுவதின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் பிளவைத் தோற்றுவித்து அதில் ஆதாயம் தேட முற்பட்ட சிறீலங்கா அரசுக்கு இத்தீர்மானம் பலத்த அடியாகும்

வடக்கு கிழக்கில் வாழக்கூடிய முஸ்லீம்களைப் பொறுத்தவரை, தமிழ் பேசும் மக்களோடு ஒன்றிணைந்து பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒரே, பிரதேசத்தின் சகோதரர்களாக வாழ்வதின் மூலம் தான் முஸ்லீம்களின் கலாச்சாரத்தையும், உயிர் உடமைகளுக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்தமுடியும் என்பதை இருசாராரும் நன்குணர்ந்துள்ளனர்.

அண்மையில் வடக்கு கிழக்கு மாகாண அரசின் எதிர்க்கட்சித் தலைவரான ஜனுப் ஷேகு இஸத்தின் அவர்கள் கொழும்பில் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்படடதும், முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் துரிதமாக மேற்கொண்ட முயற்சிகளின் பலனுக விடுவிக்கப்படடதும் அனைவரும் அறிந்ததே. இச்சம்பவம் கூட முஸ்லிம் மக்களைப் பயமுறுத்தி மாகாண அரசைப் பலவீனப்படுத்த எடுத்த நடவடிக்கை என்பதுடன் இச்சம்பவத்தின் மூலம் முஸ்லிம் மக்களுக்கு குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லீம்களுக்கு பேரினவாத இலங்கை அரசால் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் இருந்துவருவதையே அறியமுடிகின்றது.

கடந்த காலங்களில் மடடக்களப்பு மாவடடத்தில் இலங்கைப் பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து அரசின் உயர்மட்டத்தினரது ஆசிர்வாதத்துடன் தமிழ்-முஸ்லிம் கலவரத்தை உருவாக்கி, அதில் குளிர் காய முயன்றதை கிழக்கிலங்கை மக்கள் நன்கு அறிவர் இச்சமயத்தில் நிலைமையை பரஸ்பரம் புரிந்து கொண்டு, இரு சமூக மக்களின் மத்தியிலுமுள்ள தலைவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளினுல் இச்சமூகங்களின் மத்தியில் புரிந்துணர்வுடன் கூடிய இறுக்கமான ஐக்கியம் ஏற்பட்டது என்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

பழுத்த அரசியல் வாதியும், யு என். பி. யின் அம்பாறை மாவட்ட மாகாண சபை உறுப்பினருமான ஜனுப்மசூர் மௌலானவே முஸ்லீம்களின் பாதுகாப்பை மாகாண அரசு பொறுப்பேற்க வேண்டும் என்னும் தீர்மானத்தை ஏனைய கட்சிப் பிரதிநிதிகளோடு இணைந்து நின்று ஆதரித்து வாக்களித்த சம்பவம், எமக்கு எதை உணர்த்துகின்றது? தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தில்தான் எமது எதிர்காலம் தங்கியுள்ளது என்பதையும், தமிழ், முஸ்லீம் மக்களின் பாதுகாப்பை சிறீலங்கா அரசினுல் உத்தரவாதப்படுத்த முடியாதென்பதையும் தான்.

வடக்கு கிழக்கு மாகாணசபையில் முஸ்லீம் மக்களின் பாதுகாப்புத் தொடர்பான விவாதத்தில் உரை நிகழ்த்திய திருமலை மாவட்ட மாகாண சபை உறுப்பினர் திரு ஜோர்ஜ் தவராசா தம்பிராச, ''முஸ்லீம் மக்களின் பாதுகாப்புக்கு தமிழ் மக்களும், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு முஸ்லீம் மக்களும் பொறுப்பேற்று ஐக்கியத்துடன் செயல்பட வேண்டும். அதே போலவே சிங்கள மக்களின் பாதுகாப்புக்கும் கூட தமிழ் பேசும் மக்களான தமிழ், முஸ்லீம் மக்கள் பொறுப்பேற்ருல் வடக்கு கிழக்கு மாகாணமக்கள் தம்மைத் தாமே பாதுகாக்கும் சக்தியை பெறுவார்கள்'' எனக் குறிப்பிடடார். அவரது கூற்று யதார்த்த பூர்வமான அடிப்படை உண்மையை தொட்டுக்காட்டியுள்ளது

சகல தமிழ் அமைப்புகளும் தமக்குள் ஐக்கியத்தைக் கட்டி வளர்ப்பதற்கான அவாவுடன் செயலாற்றும் இச்சந்தர்ப்பத்தில், முஸ்லீம், தமிழர் பிரதிநிதிகளும் கடசி வேறுபாடுகளை மறந்து தீர்க்கமான முடிவுகளுக்கு வருவது ஒரு நல்ல சூழ் நிலை தோன்றுவதற்கான எதிர்காலத்தைக் கோடிட்டுக் காடடுகின்றது.

இது காலவரை தமக்குள் மோதிக் கொண்டு ஐக்கியத்தை சிதறடித்து தமது சக்தியை வீணடித்த சகல கட்சிகளும், இயக்கங்களும் இன்றைய அரசியல் சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டு, தமக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு, பொது எதிரியை எதிர் நோக்கத் தயாராவது, இது காலவரை துன்பங்களையும், துயரங்களையும், இழப்புக்களையுமே சந்தித்த தமிழ் பேசும் மக்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கை ஒளியைத் தருவதாக உள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 23-10-1989ல் வெளியிடப்பட்டது.

தொலைபேசி 291

### சீனிவிலை:..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சர்க்கரை என்பவற்றினுடனேயே தேனீரை அருந்தி வருகின்றனர்.

இதேவேளை தேனீர்க்கடைகளில் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி சர்க்கரீனின் பாவனையும் அதிகரித்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

புத்தரின் போதனை காற்றில் பறக்கிறது

# பௌத்த நாடுகளில் தினமும் பெருகிவரும் வன்முறைகள்

## பௌத்த கல்விமான்கள் கவலை

(கொழும்பு)

பௌத்த நாடுகளில் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்து சர்வதேச பௌத்த கல்விமான்கள் கவலை தெரிவித்துள்ளனர்

'புத்தபிரானின் போதனைகளையும் கொள்கைகளையும் பின்பற்றி வருகின்ற தாய்லாந்தில் இன்று விபச்சாரம் உச்சக்கட்டத் தொழிலாகி விட்டது.

'அமைதி மிக்க சொர்க்கபுரியாக விளங்கிய இலங்கையில் வன்செயல், பயங்கரவாதம், அழிவு வேலைகள் அதிகரித்து இனப்படுகொலை தொடர்கின்றது'

'பங்களாதேஷின் தென்கிழக்குப் பகுதியில் பழங்குடிப் பௌத்தர்கள் வாழும் கிட்டங்கொங் பகுதியில் கொலைகள், அட்டூழியங்கள் தொடர்கின்றன.

'பர்மாவில் அரசியல் அடக்கு முறைச் சம்பவங்களால் வன்முறைகள் இடம் பெறுகின்றன. கோபம், ஆத்திரம், வெறுப்பு, பழிக்குப்பழி வாங்கும் உணர்வுகள் அதிகரித்துவிளன' எனவும் பௌத்த கல்விமான்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்

### தென்பகுதியில்

( 3ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளானேர் தனிபார் வைத்திய நிலையங்களையே அதிகளவில் நாடுவதினுல் பாதிக்கப்பட்டோர்பற்றிய பூரணமான விபரத்தை அறியமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதான நீதவான்களை அரசு நியமிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது சமாதான நீதவான்களைத்தேடி பொதுமக்கள் தமது தேவைகளுக்காக அலைந்துதிரிகின்றனர்

அண்மைக்கால வன்முறைகளில் இங்கிருந்த பல சமாதான நீதவான்கள் (ஜே. பி) வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர். சில சமாதான நீதவான்கள் இறந்தும்விட்டனர்.

முன்னர் தமிழ் எம். பி.க்கள் இருந்தபோது அடிக்கடி ஒவ்வொரு தொகுதிகளிலும் சமாதான நீதவான்கள் நியமிக்கப்பட்டனர். இதற்காக பலர் விண்ணப்பித்தும் இப்பதவி அரசியல் செல்வாக்குகளால் கிடைத்தன.

இம்மாதம் பன்னிரண்டாம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் நீதியமைச்சர் நாட்டின் பல்வேறு இடங்களில் சமாதான நீதவான்களை நியமித்துள்ளார். ஆனுல் தமிழ்ப் பகுதிகளிலிருந்து எவருமே அவரது பட்டியலில் இடம்பெறவில்லை.

தற்போது வழங்கப்படும் நிவாரணம் பாஸ்போட், சத்தியக்கடதாசி மற்றும் முக்கிய ஆவணங்களுக்கு சமாதான நீதவானின் ஒப்பம் அவசியம் தேவைப்படுகிறது

சமாதான நீதவான்கள் இங்கே இல்லாததால் எஞ்சியுள்ள ஒரிரு சமாதான நீதவான்களுக்கு கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

### இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத் தேர்தலுடன் சட்டசபைத் தேர்தலும் அடுத்த மாதம் நடைபெறும் எனத் தெரிகிறது.

மகாராஷ்டிரா ராஜஸ்தான், மத்திய பிரதேசங்களிலும் சட்டசபைத் தேர்தல் நடத்துவதற்கான தீவிரயோசனை நடப்பதாகத் தெரிகிறது.

42 தொகுதிகளில் நவ. 24ம் திகதியும், 33 தொகுதிகளில் நவ. 26ம் திகதியும், ஜம்மு-காஷ்மீர், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட 10 தொகுதிகளில் இவ்விருதினங்களிலும் தேர்தல் நடைபெறும்

கொழும்பில் மீண்டும்

# இந்திய பொருள்கள் விற்பனை

(கொழும்பு)

கொழும்பில் இந்தியப் பொருட்கள் மீண்டும் மெல்ல மெல்ல தலைகாட்டத் தொடங்கியுள்ளன

இந்திய உணவுப் பொருட்கள் சஞ்சிகைகள், புடவைகள், சில்லறைப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை கொழும்பில் தற்பொழுது சிரமமின்றி பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது

சில மினித் தியேட்டர்களில் இந்தியப் படங்களை தற்பொழுது பார்த்து ரசிக்கக் கூடிய வாய்ப்பும் கொழும்பு ரசிகர்களுக்குக் கிடைத்துள்ளது.

எனினும் கொழும்பில் உள்ள வர்த்தக நிலையங்களில் 'இந்தியப் பொருட்கள் விற்கப்படுவதில்லை' என்ற அறிவித்தல் பலகைகள் மட்டும் தொடர்ந்தும் கவனிப்பாரற்ற நிலையில் தொங்கிக் கொண்டு கிடக்கின்றன.

### மாவட்ட

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யின் மாகாண சபை உறுப்பினர்களும், கோட்டச் செயலாளரும், மாகாண அரசினுல் நியமிக்கப்படும் பொதுமக்களின் பிரதிநிதிகளும் இடம் பெறுவர். இதற்கான வேலைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் செய்திக் குறிப்பொன்றில் கூறியுள்ளார்

இதேவேளை திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, மனனர், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள 68 கோட்டச்செயலாளர்களையும்(உதவி அரசாங்க அதிபர்கள்) அழைத்து வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு, அ வரதராஜப்பெருமாள் மகாநாடு ஒன்றை நடத்தவுள்ளார்.

நவம்பர் 10-ந் திகதி திருமலையில் நடைபெறவுள்ள இம்மகாநாட்டில், உள்ளூர் நிர்வாக விடயங்களில் மாகாண அரசிடம் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை மாகணத்திலுள்ள கோட்ட மட்டத்தில் அமுலாக்குவது தொடர்பாக பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிர்வாக மாற்றத்தின் மூலம் மாகாண அரசின் செயற்திட்டங்களை அமுலாக்குவதிலும், அவற்றின் பெறுபேறுகள் தாமதமின்றி மக்களை இலகுவில் சென்றடையவும் வழி ஏற்படும் எனக் கருதப்படுகின்றது.

### எமது பிரச்னை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களின் உயிருக்காக குரல் கொடுத்து போராடி வந்த நாவலர் அமிர்தலிங்கத்தையும், யோகேஸ்வரனையும் தீர்த்துக் கட்டிவிட்டதை நாம் மறக்க முடியுமா?

வடக்கு கிழக்கில் அமைதியே திரும்பக் கூடாது என்ற புலிகளுக்கு அனைத்து ஆயுதங்களும் கொடுத்து ஆட்சி கவிழ்க்க முயற்சி செய்யும் பிரேமதாஸ அனைத்துக்கட்சிகளையும் அழைத்து ஜனநாயகம் பேசுகின்ருர் அமைதி வழியைக் காட்டுகிருேம் என்று கூறும் பிரேமதாஸாவின் தோழர்களாகிய புலிகள் இன்னும் பிற இயக்க ஆதரவாளர்களை கொன்ருெழிப்பதே தமது தாகமாக கொண்டு செயற்படுகிருர்கள்.

ஜனுதிபதிக்கு அதிகாரம் இருந்தால் என்ன? பிரதமருக்கு அதிகாரம் இருந்தால் என்ன? எம்மைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒன்று தான். தமிழ் மக்கள் இதுவரை காலமும் ஏமாந்தது போதும் இனிமேலும் ஏமாறக் கூடாது.

# 'இளவரசி' கடை கொள்ளை

(சாவகச்சேரி)

நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் 'இளவரசி' ரெக்ஸ்ரைல் புடவைக் கடையை உடைத்து ஆயுதந் தாங்கிய குழுவினர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான துணிகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதற்குச் சில தினங்களுக்கு முன்னரும் இதே வகையில் கொடிகாமத்தில் மூன்று கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. தென்மராட்சிப் பகுதியில் ஆயுதக்குழுவினரின் கொள்ளைச்சம்பவங்கள் பல வகையிலும் அதிகரித்திருப்பதையிட்டு மக்கள் பீதியடைந்துள்ளனர்.

# மின்சாரம் உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் கடந்த மூன்று மாதகாலத்தினுள் உயர் மின்சாரஉற்பத்தி இருபது சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் காலகட்டத்தில் நாற்பத்திநான்கு கோடியே இருபது லட்சம் கிலோவாட்ஸ் மின்சாரத்தை மின்சார சபை உற்பத்தி செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org